Registered as a Newspaper in Ceylon ★★ விலை சதம் 15

# ஈழநாடு

EELANADU

மலர் 10

ஞாயிறு வெளியீடு எண்: 49 இதழ் 291

போன்:389 National Tamil Daily தேசிய தினசரி

கீலக வருடம் கார்த்திகை 14 நம்முரசின் 8 வெள்ளிக்கிழமை (29-11-68)



பொ. அம்பலவாணர்
தங்க வைர
நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் ரோட்,
யாழ்ப்பாணம்.

உணவு ★ பெற்றோல் ★ மண்ணெண்ணெ தட்டுப்பாடு இல்லை

# 70 சதவீதமான ஊழியர்கள் வேலைக்கு சென்றனர்

## தபால் சேவை பாதிப்பு

### பொலிஸ், இராணுவம் இரவு பகல் காவல்

கம்பலப்பிட்டி, வெள்ளி

நேற்று ஆரம்பிக்கப்பட்ட வேலைநிறுத்தத்தில் அரசாங்கசேவை ஊழியர் தொழிற்சங்கங்களின் மொத்த பிரிவுகளில் 70 சதவீதமானோர் வேலைக்குச்சென்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தபால் சேவைப் பகுதியில் குறைந்தளவு ஊழியர்களேவேலைக்குச் சென்றதாகவும் அறிவிக்கப்பட்டது.

தபால் பகுதியைத் தவிர ஏனைய திணைக்களங்களில் 93.4 வீதமானோர் வேலைக்குச்சென்றனர் என்றும் கொழும்பு நகரப்பகுதியில் தபால்சேவை வழமைபோல் நடைபெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## அடுத்தமாதத்துக்குதேவையான உணவு அனுப்பப்பட்டது

அடுத்த மாதத்துக்குத் தேவையான உணவுவகைகள் நாட்டின் சகலபகுதிகளிலுமுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு முன்னேடியாக அனுப்பப் பட்டுள்ளதாகவும் போதியளவு உணவு கையிருப்பில் தற்போதிருப்பதாகவும் உணவு அமைச்சின்நிரந்தரக்காரியதரிசி அறிவித்துள்ளார்.

லைசென்ஸ் பறிமுதலாகும்

எண்ணெய் விநியோகம் பற்றிய அறிவித்தலில் பெற்றோலிய கூட்டுத்தாபனத் தலைவர் திரு. கே. ஆழ்வாப்பிள்ளை எண்ணெய் விநியோகத்தில் தட்டுப்பாடு ஏற்படாதென்றும் பலமாதங்களுக்குப் போதுமான மண்ணெண்ணெய் கைவசமிருப்பதாகவும் தெரிவித்தார்.

மண்ணெண்ணெயைப் பதுக்கி கொள்ளைலாபமடிக்க முயற்சிக்கும் விற்பனையாளரது லைசென்ஸ் பறிமுதலாகுமெனவும் கடும் அபராதம் விதிக்கப்படுமெனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்துசேவை

இலங்கைபோக்குவரத்துச் சேவை, ரயில் சேவை நூற்றுக்குநூறு வீதம் தடையின்றி வழமைபோல் நடைபெற்றது.

மாநகரசபை

கொழும்பு மாநகரசபை அத்தியாவசிய சேவைகள் வழமைபோல் நடைபெற்றன. கொழும்பு அரசினர் ஆஸ்பத்திரி சேவைகள் சில ஊழியர்கள் வேலைக்கு வராதிருந்த போதும் வழமைபோல் நடைபெற்றன.

கொழும்பு தொலைபேசி தன்னியக்கபரிவர்த்தனை நிலையம் வழமைபோல் இயங்கி வருகிறது.

## பொலிஸ், ராணுவம் இரவு பகலாக ரோந்து

கொழும்பு நகரிலும் மற்றும் மாநகரங்களிலும் பொலிஸாருடன் இணைந்து ராணுவத்தினர் இரவு பகலாக பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

---

ஒரே சூலில் 3 குழந்தை

யாழ்ப்பாணம் வெள்ளி

ஒரே சூலில் 3 குழந்தைகளைப் பெற்றார் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு தாய்!

கா. நி

கலவரமடைந்த இன்றைய உலகில்

## ஆத்மீக உணர்வுகள் வளரவேண்டும்'

### இந்திய பௌத்தர்கள் மத்தியில் இலங்கைப் பிரதமர்

புதுடில்லி, நவ.28

கலவரமடைந்துள்ள இன்றைய உலகில் ஆன்மீக உணர்வுகள் வளர்க்கப்படவேண்டிய அவசியத்தை இலங்கை பிரதம மந்திரி இன்று இங்கு வலியுறுத்தினார். இந்த ரீதியில் புத்தமதம் பெரிய அளவில் உதவ முடியும் என்றார் அவர்.

பௌத்த ஸ்தாபனங்களால் அளிக்கப்பட்ட வரவேற்புக் கூட்டமொன்றில் திரு. டட்லிசேனநாயகா பேசினார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் பாரம்பரியமாக இருந்துவரும் தொடர்புகள் பற்றி திரு. சேனநாயகா குறிப்பிடுகையில், இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் பௌத்த மதம் பெரிய தொடர்புகளை ஏற்படுத்தியிருக்கிறது என்றும் உலகத்துக்கு குறிப்பாக இலங்கைக்கு இந்தியா கொடுத்தமிகப்பெரியநன்கொடை பௌத்தமதமாகுமென்றார்.

## இலங்கை இந்திய பிரதமர்கள் பேசினர்

புதுடில்லி, நவ.28

இலங்கைப் பிரதமர் திரு. டட்லிசேனநாயகா பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியுடன் இன்று இரு நாடுகளுக்கும் பொதுவான விஷயங்கள்பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

1964ம் வருட இலங்கை இந்திய ஒப்பந்தம், கச்சதீவு பிரச்னை, கடல் பிரதேச எல்லை, மீன்பிடிஎல்லை உரிமை ஆகிய விஷயங்கள் பேச்சுவார்த்தையில் முக்கியமாக இடம் பெற்றன.

இருநாடுகளின் பொருளாதார அபிவிருத்தி, விவசாயம் தேயிலைஏற்றுமதி ஆகியவிஷயங்களில் கூட்டு ஒத்துழைப்பு மேற்கொள்வது ஆலோசிக்கப்பட்டது.

பிரதமர் திரு. டட்லி இன்று ராஜ்காட், சாந்திவனம் ஆகிய இடங்களுக்குச் சென்று மகாத்மாகாந்தி நேரு ஆகியோரது சமாதியில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

நாளை ஜனாதிபதி டாக்டர் சாகிர்ஹுசேனை சந்திப்பார்.

யாழ்ப்பாணத்திலிருந்து

## மூன்று மரண தகவல்கள் 'வயர்லஸ்' மூலம் அனுப்பப்பட்டன

யாழ்ப்பாணம், வெள்ளி

நேற்று முன்தினமிரவு இங்குள்ள சகல தபால் நிலைய ஊழியர்களும் வேலை நிறுத்தத்தில் இறங்கியதால் இங்கிருந்து மரணச் செய்திகளை அனுப்புவதற்கு 'வயர்லஸ்' பொலிஸார் பாவித்தனர். அவசர செய்திகளை உடனுக்குடன் அனுப்ப வடபகுதி பொலிஸ் சுப்பிரின்டெண்டன் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரும் "ஏயர் மிரேஸ்" வயர்லஸூம், பொலிஸ் 'வயர்லஸூம்' பாவிக்கப்பட்டு வருகிறது. நேற்றுக் காலை மட்டும் இங்கிருந்து மூன்று மரணத் தகவல்கள் வயர்லஸ் மூலம் பொலிஸாரால் கொழும்புக்கு அனுப்பப்பட்டது. இத்தகவல்களை கொழும்பு பொலிஸார் சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரிவித்தனர்.

## 3-ந் திகதி தேர்தல் நிச்சயம் நடைபெறும்

யாழ்ப்பாணம், வெள்ளி

எக்காரணம் கொண்டும் அடுத்த 3ந் திகதி நடைபெறவிருக்கும் யாழ்ப்பாண மாநகரசபைத் தேர்தல் ஒத்திவைக்கப்படமாட்டாது என யாழ்ப்பாணம் தேர்தல் அதிகாரி திரு. எஸ். கந்தசாமி நேற்றுமாலை தெரிவித்தார்.

நேற்று ஆரம்பமானபொது வேலைநிறுத்தத்தை முன்னிட்டு தேர்தல் ஒத்திவைக்கப்படுமா வென்று தமது நிருபர் கேட்டபோதே மேற்கண்டவாறு திரு கந்தசாமி தெரிவித்தார்.

தேர்தல் இலாகா ஊழியர்கள் பொது வேலைநிறுத்தத்தில் ஈடுபடவில்லையென்றும், இதனால் தேர்தல் எக்காரணம் கொண்டும் ஒத்திவைக்கப்படமாட்டாதெனவும், திட்டமிட்டபடியே நடக்கும் எனவும் தேர்தல் அதிகாரி தெரிவித்தார். [கா.நி]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

